சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **224 / 2022**

பெயர்: பாஸ்கர் வா.சா.1 தேதி **18.11.2025**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழான மனுவினை பதிவு தபாலில் அனுப்பி வைத்தேன். அந்த தபால் அனுப்பி தேதி 11.04.2022. மேற்படி வா.சா.ஆ.10 ஆவணமானது எனக்கு வி.ஏ.ஓ-வால் நேரில் கொடுக்கப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.10 ஆவணத்தில் முதல் பக்கத்தின் மேல்பகுதியில் தேதி 11.04.2022 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அனுப்பியதாக கூறக்கூடிய மனுவின் நகல் கைவசம் வைத்துள்ளேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறே மேற்படி மனுவினை அனுப்பியதை வி.ஏ.ஓ பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ. 10 ஆவணத்தில் நான்காவது பக்கத்தில் நல்லுசாமி ரெட்டியார் மகன் துரைசாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நல்லுசாமி ரெட்டியார் என்பவர் முதல் பிரதிவாதி, துரைசாமி என்பவர் இவ்வழக்கின் இரண்டாவது பிரதிவாதியாவர். மேற்படி வா.சா.ஆ.10 ஆவணத்தில் எத்தனை பக்கங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பக்கங்கள் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு குறிப்பிடப்படவேண்டிய அவசியம் இல்லை. வா.சா.ஆ.8 முதல் 10 வரையிலான ஆவணங்கள் வாயிலாக எனக்கு எவ்வித உரிமையும் எழாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 முதல் 10 வரையிலான சட்டப்படியான ஆவணங்கள் இல்லை என்று சொன்னாலும், மேற்படி ஆவணங்கள் எனது செல்வாக்கினால் பெறப்பட்டது என்றால் சரியல்ல. நான் அனுப்பியதாக கூறக்கூடிய தகவல் அறியும் உரிமை மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் அவை எனக்கு எதிராகிவிடும் என்பதால் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2025.11.18 17:19:49 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.